திருப்பத்தூர் மாவட்டக் கழகத்தின் சார்பில்

கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாள் விழா தொடர் பொதுக் கூட்டங்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருப்பத்தூர் மாவட்டத்தின் சார்பில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை கொண்டாடும் வகையில் மாவட்டம் முழுவதும், தொடர் பொதுக் கூட்டங்கள், கழக கொடியேற்றி, பொது மக்களுக்கு இனிப்பு வழங்குதல் மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள், மருத்துவ முகாம்கள், ஆதரவற்ற ஏழை, முதியோர், சிறுவர் இல்லங்கள், காப்பகங்களில் உணவளித்தல் என தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. எனவே திருப்பத்தூர் மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில, மாவட்ட அணிகளின் அனைத்து அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, BLC, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளைக்கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் இந்நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்பித்திட வேண்டுகிறேன்.

வ.எண்	தேதி	சிறப்பு பேச்சாளர்	நிகழ்ச்சி ஏற்பாடு
1	03.03.2025	சேலம் சுஜாதா 9626050717	திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் 9894830020
2		சேலம் கோவிந்தன் 9363194596	நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றியம் 9443203776
3		சைதை சாதிக் 9566016668	வாணியம்பாடி நகரம் 9443229828
4		கந்திலி கரிகாலன் 9245181255	மாதனூர் மேற்கு ஒன்றியம் 9443007498
5	04.03.2025	மங்கலம் பிரபாகரன் 9486335485	திருப்பத்தூர் நகரம் 9443626100
6		முரசொலி மூர்த்தி 8939139429	ஜோலார்பேட்டை நகரம் 9443099197
7		அபுபக்கர் 6381511808	ஆம்பூர் நகரம் 9894379440
8		நெல்லிகுப்பம் புகழேந்தி 9443444923	ஆலங்காயம் கிழக்கு ஒன்றியம் 9751555700
9	05.03.2025	வாசு. கோ.கருணாநிதி 9884862211	கந்திலி மேற்கு ஒன்றியம் 9443506093
10		ஆலந்தூர் ஒப்பிலாமணி 9444350302	ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியம் 9600973415
11		தாம்பரம் ஜின்னா 9444640094	ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் 9500115875
12		கோவை ஏ.ஆட்லின் 8438946739	குடியாத்தம் வட கிழக்கு ஒன்றியம் 9894240440
13		சேலம் வெ.சரண்யா 9688499839	மீனவர் அணி 8940996707
14	06.03.2025	திருப்பூர் மனோகர் பாபு 9659896949	கந்திலி மத்திய ஒன்றியம் 9443227059
15		நாகம்மை கருப்பையா 9790994670	ஜோலார்பேட்டை மத்திய ஒன்றியம் 9487490754
16		பசும்பொன் ரவிச்சந்திரன் 9442250161	திருப்பத்தூர் கிழக்கு ஒன்றியம் 9994266057
17		சேர்க்காடு கென்னடி 9443036864	அணைக்கட்டு தெற்கு ஒன்றியம் 8012979240
18		ஆடுதுறை உத்திராபதி 9443195941	சிறுபான்மை நல உரிமைப் பிரிவு அணி 9944092220
19	07.03.2025	புதுக்கோட்டை விஜயா 9443527996	கந்திலி கிழக்கு ஒன்றியம் 9443006823
20		ஆருர் மணிவண்ணன் 9566055557	ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றியம் 9865754298
21		மலர்மன்னன் 9444255630	நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றியம் 8489875553
22		சேலம் ச.அஜித்குமார் 9025683397	மாதனூர் கிழக்கு ஒன்றியம் 9487105186
23	08.03.2025	சூர்யா வெற்றிகொண்டான் 9443333318	கந்திலி தெற்கு ஒன்றியம் 9944655165
24		சேலம் சூரியபிரகாஷ் 8248965718	ஆலங்காயம் பேரூர் 9443041402
25		நாமக்கல் ம. மோகநிதி 9894687475	மாவட்ட நெசவாளர் அணி 9500327581
26		ஈரோடு சூ.க.தாரணி 9384923162	மாநில விவசாய அணி து.செயலாளர் 6383704903
27	09.03.2025	ஆம்பூர் தர்மன் 9629988492	நாட்றம்பள்ளி பேரூர் 9994519795
28		சென்னை அரங்கநாதன் 9962536445	உதயேந்திரம் பேரூர் 9790171947
29		சேலம் எஸ்.திவ்யா 6369377761	மாவட்ட மகளிர் அணி 8695996768
30		திருப்பூர் கவின்குமார் 9095435554	மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை 9443104347
31	10.03.2025	சேலம் மு.கபில் 8110053490	மாவட்ட வர்த்தகர் அணி 9443280343
32		ஈரோடு செ.தமிழரசன் 9095607454	மாவட்ட தொழிலாளர் அணி 9486914684
33		கோவை ச.பூங்கொடி 7502891515	மாவட்ட மகளிர் தொண்டரணி 9159411835
34		கரூர் முரளி 9443122557	மாவட்ட மருத்துவர் அணி 7708354344
35	11.03.2025	வயலூர் கிருஷ்ணமூர்த்தி 9976596810	மாநில தொண்டரணி து.செயலாளர் 9944364073
36		பொன்னேரி சிவா 9841534800	மாவட்ட சுற்றுச்சூழல் அணி 6380389171
37		எழும்பூர் கோபி 8825813217	மாவட்ட வழக்கறிஞர் அணி 9443214191
38		எஸ்.மேகநாதன் 7868072936	மாவட்ட அயலக அணி 9629864511
39		கரூர் தி.பிரபு 8072247652	மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி 9585305858
40	12.03.2025	கடலூர் இள.புகழேந்தி 9442478545 சேலம் தமிழரசன் 9976702728	மாவட்ட மாணவரணி 9790029726
41		சேப்பாக்கம் பிரபாகரன் 7010820683	மாவட்ட பொறியாளர் அணி 8667281148
42		டாக்டர் செ.வல்லப்பன் 9443494789	மாவட்ட இலக்கிய அணி 9486308127
43		போடி காமராஜ் 9944330220	மாவட்ட தொண்டரணி 7667456666
44	13.03.2025	காவேரிபட்டினம் இளையராஜா 9942478043	மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர்அணி 9486844419
45		பவானி கண்ணன் 9444910784	மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு 7868072936
46		தக்கோளம் தேவபாலன் 9994242872	மாவட்ட விவசாய தொழிலாளர் அணி 9790306051
47		திருப்பூர் நாகராஜ் 6374607021	மாவட்ட விவசாய அணி 9843678125
48	23.03.2025	S.D.இசை 9611122781	மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி 9787515207
49	09.03.2025	திருப்பத்தூர்	மாவட்ட இளைஞரணி 9894143620
50	16.03.2025	ஜோலார்பேட்டை	
51	23.03.2025	வாணியம்பாடி	
52	30.03.2025	ஆம்பூர்	

க.தேவராஜி எம்.எல்.ஏ.,
மாவட்டக் கழகச் செயலாளர்
திருப்பத்தூர் மாவட்ட தி.மு.க.

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ்

45 கலைஞர்கள் - மரபுரிமையினருக்கு 40 லட்சம் ரூபாய் நிதியுதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, பிப். 28 -

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் 40 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவினை 45 கலைஞர்கள் மற்றும் மரபுரிமையினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழியாக தலா 1 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாடகக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாட்டியக் கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 20 மறைந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பிற்காக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசால் 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்து வரும் கலை வடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்கு புத்துயிர் அளித்தல், தமிழகப் பாரம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழி வழங்குதல்

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் ஆச்சாள்புரம் எஸ். சின்னதம்பி, ஆக்காட்டி ஆறுமுகம், நெல்லை சுந்தரராஜன், மதுரை ஜி.எஸ். மணி, ஏ.என். பாக்கியலட்சுமி, திருமதி சீதாலட்சுமி (எ) ஜி.எம். சித்திரைசெல்வி, வி. நாகு, திருமதி பி. சீதாலட்சுமி, திருமதி ஆர்.எஸ். ஜெயலதா, எஸ். ஆண்ட்ரூஸ் ஆகியோருக்கு பொற்கிழித் தொகையாக தலா 1 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க முனைவர் சண்முக செல்வகணபதி, முனைவர் ப. ரங்கராஜ், வளப்பக்குடி வீரசங்கர், முனைவர் இரா. சீனிவாசன், செ. நடராஜன் ஆகிய 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய நிதியுதவி வழங்குதல்

தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட 5 நாடகக் கலைஞர்களுக்கும், 5 நாட்டியக் கலைஞர் களுக்கும் நிதியுதவி வழங்கிடும் அடையாள மாக 4 கலைஞர்களுக்கு தலா 1.50 இலட்சம் ரூபாய் நிதியுதவிக் கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

மறைந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்

மறைந்த 20 கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பிற்காக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 மரபுரிமையினருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் மொத்தம் 40 இலட்சம் ரூபாய்க்கான நிதியுதவினை 45 கலைஞர்கள் மற்றும் மரபுரிமையினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பி.கிருஷ்ணன் தலைமையில்

மும்பையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

அலிஷேக் மீரான் சிறப்புரை! மும்பை புறநகர் மாநிலக் கழக நிர்வாகிகள் பங்கேற்பு!

மும்பை, பிப். 28–

மும்பை புறநகர் மாநிலம் சீத்தாகேம்ப் கிளைக் கழகம் நடத்தும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா பி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறுகிறது. அலிஷேக் மீரான் சிறப்புரை யாற்றுகிறார்.

வருகிற 02.03.2025 ஞாயிறு மாலை 6 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா திமுக கிளைக் கழக அலுவலகம் முதல் தளம், D sector, A3 lane Market road சீதாகேம்ப்பில் நடைபெறவுள்ளது.

மும்பை புறநகர் மாநிலத் தி.மு. கழகத்தின் பொருளாளர் பி.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் கிளைக்கழகப் பொறுப்பாளர் ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

மும்பை புறநகர் மாநிலத் திமுக செயலாளர் அலிசேக் மீரான் சிறப்புரை ஆற்றுகிறார். துணைச் செயலாளர் முனைவர் வதிலை பிரதாபன் தொடக்க வுரை ஆற்றவுள்ளார்.

நிகழ்வில் தந்தை பெரியார் திருவுருவப் படத்தை புறநகர் திமுக அவைத்தலைவர் ஜேம்ஸ் தேவதாசன், பேரறிஞர் அண்ணா படத்தை இலக்கிய அணித் தலைவர் வே. சதானந்தன், முத்தமிழறிஞர் கலைஞர் படத்தை மாநில இளைஞரணி அமைப்பாளர் ந.வசந்தகுமார் மற்றும் இனமான பேராசிரியர் திருவுருவப் படத்தை கோரேகாவ்ன் ஆரேகாலணி கிளைக் கழகப் பொறுப்பாளர் சிவக்குமார் சுந்தர்ராஜ் ஆகியோர் திறந்து வைக்கிறார்கள்.

மும்பை மாநிலத் தி.மு.கழகப் பொறுப்பாளர் கருவூர் பழனிச்சாமி புறநகர் தி.மு.க. துணைச் செயலாளர் அ.இளங்கோ திராவிட கழகத் தலைவர் பெ.கணேசன் , டோம்பிவிலி கிளைச் செயலாளர் வீரை.சோ.பாபு, பகுத்தறிவாளர் கழகத் தலைவர் அ. இரவிச்சந்திரன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் பாவலர் நெல்லை பைந்தமிழ், திமுகழகப் பேச்சாளர் முகமது அலி ஜின்னா, இலக்கிய அணித் துணை அமைப்பாளர் வெ.அ. ஜைனுல்லாபுதீன் பொய்சர் மூர்த்தி, அம்பர்நாத் திமுக ழகம் தண்டபாணி, மும்பை தி.மு க மேனாள் பொருளாளர் எஸ்.பி.செழியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

மும்பை மாநிலத் தி.மு.கழக அவைத்தலைவர் வே.ம.உத்தமன், கழக முன்னோடிகள் என்.வி.சண்முகராசன், ஆரே காலனி தர்மலிங்கம், புறநகர் தி.மு.க. இலக்கிய அணிப் புரவலர் சோ.பா.குமரேசன், பீவண்டி கிளைச் செயலாளர் மெஹ்பூப் பாட்ஷா சேக், மும்பை புறநகர் திமுக இளைஞரணித் துணைத் அமைப்பாளர்கள் இரா.கணேசன், கவிஞர் வீரமணி, உதய்குமார் பாலமுருகன், தானே ஜாகீர் உசேன், பிவண்டி கிளை அவைத்தலைவர் முகமது அலி கல்யாண் கிளை அவைத்தலைவர் .க.ஜீவானந்தம், பாண்டுப் கிளையைச் சேர்ந்த ச.சி. தாசன், மாரி, லல்லுபாய் காம்பவுண்ட் இரா.மதியழகன், அம்பர்நாத் கிளைச் செயலாளர் ஜஸ்டின், தானே கிளைச் செயலாளர் பாலமுருகன், முலுண்ட் கிளைச் செயலாளர் எஸ்.பெருமாள், பிவண்டி கிளைப் பொருளாளர் முஸ்தாக் அலி, வாஷி கிளைக்கழகச் செயலாளர் பழனி, சயான் கிளைக் கழகம் சி.சுடலையாண்டி, ஜோகேஸ்வரி கிளைச் செயலாளர் தமிழினநேசன், ரமேஷ், வாஷி கிளை சார்ந்த ஆறுமுகம், தில்லை, எம்.ஈ.முத்து, டி.சங்கர், குலசேகரன், ஜி.பசுபதிநாதன், தமிழர் நட்புக் கழகத் தலைவர் மா.கதிரவன், முலுண்டு கிளை அப்துல் லத்தீப், சங்கரசுப்பு, பன்வேல் கிளைக் கழகம் சுஃபி, பாண்டு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நிறைவாக, சீத்தாகேம்ப் கிளை உறுப்பினர் மூர்த்தி நன்றியுரை ஆற்றவுள்ளார். கழக உணர்வாளர்கள் அனைவரும் நிகழ்வில் கலந்து மகிழும்படி சீத்தாகேம்ப் கிளைக் கழகத் தோழர்கள் அழைக்கிறார்கள்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ப. பழனிவேல்
பிப்ரவரி 28 (2022)

தனது இளமைப் பருவத்திலேயே கழக உறுப்பினராகி பணியாற்றி வந்தவர்.

ஒன்றுபட்ட நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

மூன்று முறை வடவூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், இரண்டுமுறை ஒன்றியக்குழு உறுப்பினராகவும், நாகை மாவட்ட ஒன்றிய பெருந்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.